1993 மார்ச் 30]

அரசிடமிருந்து கைவிடப்பட்டது. ஆகையால் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தீர்மானம் புதிதாக ஒன்று போடப்பட்டு கமுதக் குடி மற்றும் காட்டு பரமக்குடி கிராமத்தில்—பரமக்குடி வட்டத் திலேயே—சுமார் 14.56 ஏக்கர் பட்டா நிலங்களை வாங்கி இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்குண்டான அனைத்துப் பூர் வாங்கப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலை வரவர்களே, பரமக்குடி தொகுதி பின் தங்கிய பகுதியாக இருக் கிறது. மாவட்டத்திலேயே பரமக்குடி பெரிய நகரமாகவும் உள்ளது. இங்கு பல அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. இங்கு 150 தனிக் குடியிருப்புகளும், 100 அடுக்கு மாடி வீடுகளும் அரசு அலுவலர்களுக்காகக் கட்டும் திட்டத்தை உடனடியாக இந்த நிதியாண்டில் கட்டி முடிக்க அரசு முன் வருமா என அமைச்சரவர் கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 178, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்.

178—

கல்வராயன் மலையில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் சேகரிக்கப்படும் தேன் காதித்துறை மூலம் விற்பனை.

*10138—திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு ஆதி திரா விடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) கல்வராயன் மலையில் தேனீ வளர்க்கும் திட்டம் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு அங்கு சேகரிக்கப்படும் தேன் காதித்துறை மூலம் விற்பனை செய்யப் படுகிறதா ?

(ஆ) அதனால் அரசுக்கு கிடைத்த வருமானம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தேன் விற்பனையில் அரசுக்குக் கடந்த 5 ஆண்டுகளில் கிடைத்த இலாபம் ரூ. 29,244.00 ஆகும்.

[1993 மார்ச் 30

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் எந்தெந்த இடங்களில் கூட்டுறவுச் சங்கம் மூலம் தேனீ வளர்க்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் கூறுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விவரக் குறிப்பு என் வசம் இல்லை. தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கல்வராயன் மலைப் பகுதியில் கல்வராயன், வெள்ளிமலை, கரியாலூர், இன்னாடு, கிளாக்காடு ஆகிய இடங்களில் குடிசைத் தொழில் போன்று மலைவாழ் மக்கள் தேனீ வளர்த்து வருகிறார்கள். எனவே, அவர்களை ஊக்குவிக்கும் முறையில் எந்த எந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தத் தேனை வாங்குகின்றன என்ற குறிப்பு இல்லை என்று கூறுகிறார். இருப்பினும் அவர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசு இந்தத் தேனீ வளர்க்கும் திட்டங்களை தீவிரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இராமசுவாமி, ஆதி திராவிடர் நலன் பற்றிய பிரச்சினை மட்டும்தான் மாண்புமிகு அமைச்சரிடம் வரும். நீங்கள் கேட்கிற கேள்வி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சரிடத்திலே கேட்க வேண்டிய கேள்வி. இவரிடத்திலே அதற்கு பதில் இருக்காது. எனவே, தனிக் கேள்வி அவருக்குப் போடவும்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில் துறை அமைச்சருக்குத் தான் போட்டேன். ஆனால் அதை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சருக்குப் போட்டுள்ளார்கள். எனவே நான் அந்த கேள்வியை கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. ஊரகத் தொழில் துறை அமைச்சர் என்று தான் கேள்வி போட்டிருந்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படியானால் இதைத் திரும்ப ஊரகத் தொழில் துறை அமைச்சரவர்களுக்கு அனுப்பி, உங்களுக்கு முறையாக பதில் வழங்கப்படும்.

வினா எண். 179, திரு. இரா. அப்பு நடேசன், திரு. ஆ. பாலையா, டாக்டர் எம். மோசஸ், திரு. எம். ஆண்டி அம்பலம், திரு. மா. சுந்தரதாஸ் ஆகியோர் இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்துப்பிள்ளை, திரு. கு. லாரன்ஸ் மாண்புமிகு பிற்பட்டோர் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.